முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1283

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.04.2023, செவ்வாய்கிழமை

1. ஞானசித்தியே அரங்கா வாழ்க
ஞான கீர்த்தியே தேசிகா வாழ்க
வானவர்கள் மெச்சுகின்ற வள்ளலாய்
வையகத்தில் வாழுகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 21 ம் நாள், 04.04.2023, செவ்வாய்கிழமை)
ஊழ் போக்கும் அரங்கமகா ஞானியர்க்கு
உயர்வான சுபகிருது சேல்திங்களில் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தொண்டர்படை
உலகை வெல்லும் சக்தியாக மாறிவர
மறைபோற்றும் மாதர்ம சக்தியே
மண்ணுலகமெங்கும் இவர்கள் எடுத்துச்செல்ல
4. செல்லுகின்ற இந்த அற்புதங்கள் சிறப்பாய்
தேசமெல்லாம் வரவேற்கப்பட்டு
மறுப்பின்றி அரங்கன் நாமஜெபத்தை
மண்ணுலகம் வேதமாக முழங்கப்பட்டுவர
5. வருகவே வையகத்தில் மாற்றம் அரங்கனின் ஞானமாக வேதமாக
அறத்தின் பலமாக தொண்டர்களின் சக்தியாக அற்புதம்நடந்து
அகிலத்தில் ஞானவான்கள் என்கின்ற பேராற்றல் பெருகி
அகிலமே ஞானலோக மாற்றம் பெறும்
6. கலியுகம் தன் சக்தியை இழந்து
கருணைமிக்க அரங்கன் வழிகாட்டலில்
அழியாமைமிக்க தொண்டர்கள் மூலம்
ஆற்றல்பட ஞானயுகமாற்றம் காணக்கூடும்

7. காணவே உலகோர் விரைந்து அரங்கன் குடில்நோக்கி
கலந்து அரங்கன் தொண்டுவழி இணைந்து
கோலமதாய் அரங்கமகானை வலம்வந்து குறையிலா தீட்சைவழி நடக்க
நடக்கவே உலகமெங்கும் அற்புதம் ஞானமாக ஞானிகள் படைப்பாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–